


சென்னை, இராணி மேரி கல்லூரியில் நேற்று முன்தினம் (21.07.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் தற்காலிக அடிப்படையில் நிரப்பபடவுள்ள 574 கௌரவ விரிவுரையாளர்கள் பணி தேர்விற்கு விண்ணப்பிப்பதற்கான இணையதள பதிவினை தொடங்கி வைத்தார். உடன் கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## இராணி மேரி கல்லூரியில் 105-வது பட்டமளிப்பு விழா!

# "நான் முதல்வன்" திட்டங்களை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!

### மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பேச்சு!




சென்னை, ஜூலை 23-

சென்னை, இராணி மேரி கல்லூரியில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் நேற்று முன்தினம் நடைபெற்ற 105வது பட்டமளிப்பு விழாவில் 1,523 மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

இப்பட்டமளிப்பு விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்கள் பேசியதாவது:-

நூற்றாண்டை கடந்து மாணவியர்களுக்கான ஒரு சிறந்த கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறன். உலகப் போர் தொடங்கிய 1914ஆம் ஆண்டு மதராஸ் மாகாண கவர்னர் பெண்ட்லண்ட் பிரபுவின் ஒப்புதலுடன் மேடம் டீ லா ஹே அவர்களை முதல்வராகக் கொண்டு 37 மாணவியர்களுடன் கேப்பர் இல்லம் எனும் கட்டிடத்தில் இக்கல்லூரி தொடங்கப்பட்டது. இன்று இக்கல்லூரியில் 6,000த்திற்கும் மேற்பட்ட மாணவியர்கள் பயில்கின்றனர்.

**நவீன வசதிகளுடன் கூடிய விடுதிக் கட்டடம்!**

முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் இக்கல்லூரிக்கு ரூ.42 கோடியில் நவீன வசதிகளுடன் கூடிய விடுதிக் கட்டடம் கட்டி, அவர் கையாலேயே திறக்கப்பட்டது. மாற்றுத் திறனாளி மாணவியர்கள் பயன்பாட்டிற்கு ரூ.4 கோடி யில் சாய்வுதளம் (RAMP) அமைப்பு, மின் தூக்கி வசதி மற்றும் சுமார் ரூ.2 கோடியில் தாவரவியல் பாடப்பிரிவுக் கட்டடங்கள் போன்றவைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று இவ்விழாவில் 1,252 மாணவியர்கள் இளநிலை பட்டத்தினையும், 237 மாணவியர்கள் முதுநிலை பட்டத்தினையும், 34 மாணவியர்கள் M.PHIL பட்டத்தினையும் என மொத்தம் 1,523 மாணவியர்கள் பட்டம் பெறுகின்றனர். இதில் 550 மாணவியர்கள் முதல் தலைமுறை பட்டதாரிகள். இத்தகைய பின்புலம் இருக்கும் மாணவியர்கள் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்று இருப்பது மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இருக்கிறது. அதிலும், 100 மாணவியர்கள் பதக்கம் பெற்று விளங்குவது வெகு சிறப்பு. அவர்களிலும் மாற்றுத்திறனாளி மாணவியர்கள் 19 பேர் பட்டம் பெறுவது தனிச் சிறப்பு.

இக்கல்லூரியில் தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்களில் பயன்பெற்ற முதல் தலைமுறை பட்டதாரி 55 மாணவியர்கள், நான் முதல்வன்திட்டத்தில் பயன்பெற்ற மாணவியர்கள் 4,263 மற்றும் புதுமைப் பெண் திட்டத்தில் 1,824 மாணவியர்கள் பயன்பெறுகின்ற னர்.

இந்தி, சமஸ்கிருதத்தை உள்ளடக்கிய மும்மொழிக் கொள்கையே புதிய கல்விக் கொள்கை. இது தமிழ்நாடு அரசின் இருமொழிக் கொள்கைக்கு முரணானது.

தற்போதுள்ள 10+2+3 என்ற நடைமுறை மாணாக்கர்கள் எளிதாக பட்டப் படிப்புக்குச் செல்லும் முறை. இந்த கல்வி முறையை மாற்றக் கூடாதென்பதே தமிழ்நாட்டின் நிலைப்பாடாகும். இதை எதிர்ப்பதில் இந்தியாவிலேயே இன்று தமிழ்நாடு மட்டும்தான் முன்னணியில் நிற்கிறது.

**மாணவர்கள் – நான் முதல்வன் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!**

நமது முதலமைச்சர் அவர்கள் உயர்கல்வியில் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களுக்குச் சிறிதும் அஞ்சாமல், போராடி வருகிறார். மாணாக்கர்கள் அரசின் "நான் முதல்வன்" போன்ற திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். 'நான் முதல்வன்' திட்டம் மாணாக்கர்களுக்கு எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தரும். அதைத்தான் நம் முதல்வர் அவர்கள் மாணாக்கர்களிடம் விதைத்திட அறிவுறுத்தியுள்ளார்.

இன்று பட்டங்களை பெறும் மாணவியர்களாகிய நீங்கள் இதுவரை ஒரு மாணவி என்ற நிலையில் படிக்கும் இடம் சார்ந்தும் உங்களின் பெற்றோரைச் சார்ந்தும் இருந்திருப்பீர்கள். ஆனால், இன்று முதல் உங்கள் ஒவ்வொருவரையும் தனித் தனி மனிதராக இந்தச் சமூகம் பார்க்கப்போகின்றது. இந்தச் சமுதாயத்தில் எந்த உயரத்தை எட்ட வேண்டுமோ அதை உங்களின் செயல்களால் நீங்கள் பெற்றுக் கொள்கிற நேரம் வந்துவிட்டது. அதற்கான அடையாளம் தான் இன்று நீங்கள் பெறும் பட்டம். எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு பயணம் செய்யுங்கள். நிறைந்த புகழையும், வெற்றிகளையும், மகிழ்ச்சியையும் நீங்கள் பெற வேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, கல்லூரி முதல்வர் முனைவர் பா. உமாமகேஸ்வரி, பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள், மாணவியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



கோவை மாவட்டம், வடக்கு மண்டலம், பீளமேடு வார்டு எண் : 27, குறும்பர் வீதி, வி.கே.ரோடு, இலைக் கடை வீதி, நெல்லை ஸ்டோர்ஸ் வீதி உள்ளிட்ட பகுதிகளில் ரூபாய் 43.50 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் துவக்கி வைத்தார். இதில் ஆவாரம்பாளையம் பகுதி பொறுப்பாளர் ப.மோகன்ராஜ், மாநகராட்சி வடக்கு மண்டலத் தலைவர் கதிர்வேல், மாமன்ற உறுப்பினர் அம்பிகா தனபால், மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால், அ.செந்தில்குமார், டைட்டஸ், பூட்டு ஆறுமுகம், ரமேஷ், பூபதி, வேலுச்சாமி, கித்தான் ரங்கராஜ், ர.அன்பழகன், மகளிர் அணி திலகவதி, விஜயா, தேவி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல் நலம்!

## தொலைபேசியில் பிரதமர் மோடி – எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி – சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் – கட்சித் தலைவர்கள் – திரையுலகினர் நலம் விசாரித்தனர்!

சென்னை, ஜூலை 23–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடல்நலக் குறைவால் நேற்று முன்தினம் (21.7.2025) சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து, அவரது உடல்நலம் குறித்து தொலைபேசி வாயிலாக பிரதமர் நரேந்திர மோடி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், முக்கிய அரசியல் தலைவர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், திரையுலக பிரபலங்கள் ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைதொடர்புகொண்டுநலம்விசாரித்தனர்.

### சேலம் மாவட்டத்தில்

# அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம்!

## அமைச்சர் இரா.ராஜேந்திரன் உறுதி!

சேலம், ஜூலை 23-

சேலம் மாவட்டத்தில் சீரான குடிநீர் விநியோகம், தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் நகர்ப்புற தூய்மை தொடர்பாக அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, முன்னிலையில் நேற்று முன்தினம் (21.07.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் வகையில் தொடர்ந்து கண்காணித்திட அறிவுறுத்தியுள்ளார்கள். அந்தவகையில் சேலம் மாவட்டத்தில் சீரான குடிநீர் விநியோகம், தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் நகர்ப்புற தூய்மை தொடர்பாக அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் நடத்தப்படுகிறது.

குறிப்பாக சேலம் மாவட்டம் முழுவதும் குடிநீர் தொடர்பான பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து அலுவலர்கள் பணியாற்ற அறிவுறுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இன்றைய தினம் நடைபெற்ற வாராந்திர ஆலோசனைக் கூட்டத்தில் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் என அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுவரும் குடிநீரின் அளவு மற்றும் குடிநீரின் தேவைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சேலம் மாவட்டம் முழுவதும் சீரான குடிநீர் விநியோகம் வழங்கிடுவதை அலுவலர்கள் உறுதி செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும், நடைபெற்று வரும் குடிநீர் மேம்பாட்டு பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக, கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் எவ்வித மின்தடையும் இல்லாமல் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்படுவதை உறுதி செய்திடவும், குடிநீர் குழாய்களில் உடைப்புகள் ஏற்பட்டால் உடனுக்குடன் சரிசெய்திட வேண்டுமெனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று, குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் ஏதேனும் இருப்பின் அவற்றை போர்க்கால அடிப்படையில் விரைந்து சீரமைத்திடவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளான சாலை வசதிகள், குடிநீர் வசதிகள், தெரு விளக்கு வசதிகள், சுகாதார வசதிகள் உள்ளிட்ட பணிகள் நாள்தோறும் முறையாக நடைபெற்று வருகிறதா என்பது குறித்து தொடர்புடைய அலுவலர்கள் தினந்தோறும் ஆய்வுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு பொதுமக்களுக்கான அத்தியாவசிய தேவைகள் கிடைத்திடுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் நடைபெற்று வரும் திருக்கோயில் திருப்பணிகள் தொடர்பாகவும், போக்குவரத்துத்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் விடியல் பயணம் திட்டம் குறித்தும், புதிய பேருந்து சேவைகள் தொடர்பாக பொதுமக்களின் கோரிக்கைகள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி, மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) விவேக் யாதவ், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி சங்கமித்திரை, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) குருராஜன், மாநகரப் பொறியாளர் செல்வநாயகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் ரமேஷ் பாபு உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சீர்காழி அகர எலத்தூர் கிராமத்தில் ஆற்றில் மூழ்கி

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 23-

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், அகரஎலத்தூர் கிராமம், பனங்காட்டங்குடி பகுதியிலுள்ள கொள்ளிடம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

மயிலாடுதுறை மாவட்டம் மற்றும் வட்டம், பட்டமங்கல ஆராய தெருவைச் சேர்ந்த அருண்சங்கர் (வயது 22) த/பெ.சங்கர் மற்றும் சீர்காழி வட்டம், கொண்டல் கிராமம், குடியான தெருவைச் சேர்ந்த சிபிராஜ் (வயது 21) த/பெ. ராஜேஷ் கண்ணா ஆகிய இருவரும் 20.7.2025 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் சீர்காழி வட்டம், அகரஎலத்தூர் கிராமம், பனங்காட்டங்குடி பகுதியில் உள்ள கொள்ளிடம் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இச்சம்பவத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### சிவகாசி – நாரணாபுரத்தில் பட்டாசு ஆலை வெடி விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதிஉதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 23-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், நாரணாபுரம் கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு :-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், நாரணாபுரம் கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் 21.07.2025 அன்று பிற்பகல் சுமார் 3.50 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் கீழத்திருத்தங்கல், முத்துராம லிங்கம் காலனியைச் சேர்ந்த கார்த்திக் (வயது 23) த/பெ.தங்கராஜ் மற்றும் இரண்டு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் திருமதி.நாகலட்சுமி (வயது 55) க/பெ.முனியசாமி, திருமதி.மாரியம்மாள் (வயது 53) க/பெ.முத்துவேல் மற்றும் திருமதி.மாரியம்மாள் (வயது 50) க/பெ.தங்கராஜ் ஆகிய மூன்று நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.